**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC No. 581/2018 |
| Deposition of witness for | : | PW : 15 |
| Name | : | திருமதி.S. வனிதா,<br>காவல் துணை ஆணையர்.<br>மதுரை மாநகரம். |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.12.2024**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது காவல் துணை ஆணையராக மதுரை மாநகரத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 ம் வருடம் சமயநல்லூரில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த போது, நாகமலை புதுக்கோட்டை காவல்நிலையத்தில், 04.02.2017 அன்று பதிவு செய்யப்பட்ட நிலைய குற்ற எண். 89/2017 u/s. 174(3) of Cr.P.C, 176 Cr.P.C, 201 of IPC வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே மாலை 06.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான நடுஒத்தவீடு, விருமாண்டி என்பவருக்கு

சொந்தமான வீட்டிற்கு சென்று சம்பவ இட சாட்சியமான ஆறுமுகம், கருப்பையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் முறையே அதசாஆ.8 மற்றும் அதசா.9 ஆகும்.** மேற்படி சம்பவ சாட்சிகளை அன்றைய தினமே விசாரணை செய்து தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் பன்னீர், கவிதா, சந்திரலேகா, சுரேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 05.02.2017 ம் தேதி சாட்சிகள் பாக்கியலெட்சுமி, அருள்பாண்டி, நாகேந்திரன், ஜோதி, சூர்யகலா, மதுபாலா, சசிக்குமார், சந்திரா, மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் 05.02.2017 அன்று 174(3) of Cr.P.C, 176 Cr.P.C, 201 of IPC-லிருந்து சட்டப்பிரிவுகளை 306, 201 of IPC and Sec.4(B) of TNPWH ACt ஆக சட்ட மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். **அந்த சட்டப்பிரிபு மாறுதல் அறிக்கை அதசாஆ.10 ஆகும்.** பின்னர் 06.02.2017 ம் தேதி சாட்சிகள் பாரி, குணசேகரன், விருமாயி, கழுவத்தேவர், சமுத்திரபாண்டி ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் அன்றைய தினமே வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த நாகமலைபுதுக்கோட்டை காவல் ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் முதல் விசாரணை செய்த வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கோ. செந்தில் குமாரி

அவர்களை  விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரிகள் அனைவரும் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்று விட்டார்கள். எனது புலன் விசாரணையை முடித்து, எதிரிகளின் மீது குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் காணப்பட்டதால் 05.04.2017 ம்தேதி எதிரிகளின் மீது  குற்ற இறுதி அறிக்கையை சமர்ப்பித்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்):**

இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் முன்பாக, அந்த சம்பந்தப்பட்ட இடத்திற்கு பொறுப்பில் உள்ள VAO, RDO அவர்களுக்கு தகவல் சொன்னதாக இந்த வழக்கில் அதசாஆ.6  RDO முதல் நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தேக மரணம் என்ற உடனேயே குவிமுச பிரிவு 174, 176 ன்படி முதல் நிலை விசாரணை செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். VAO, தகவல் பெற்றவுடன் RDO  எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்ற விபரம் நான் தெரிந்து கொண்டேனா என்றால், 04.02.2017 ம் தேதி மாலை 05.00 மணிக்கு மேல் வந்ததாக கேள்விபட்டேன். முதல் தகவல் அறிக்கையும் அதே 05.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். 05.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்த RDO க்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்ற விபரம் நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. VAO என்பவர் அவர் பணிபுரியும் கிராமத்தின் முதல்நிலை அதிகாரி என்றால் சரிதான். அவர் தன் மேலதிகாரிக்கு ஒரு தகவல் கொடுத்திருந்தால், இந்த

சம்பவத்தின் ஆதி தகவல் அதுதான் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர்கள் புகார் அளிக்க வரும்போது,அதைதான் முதல் தகவல் அறிக்கையாக எடுத்துக்கொள்வோம். RDO அவர்களை நான் விசாரித்து அவர் பெற்ற முதல் தகவல் என்ன என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சம்பவம் குறித்து VAO, RDO கொடுத்த முதல் தகவலைப் பற்றி வழக்கு கோப்பில் எங்காவது குறிப்பிட்டுள்ளேனா அல்லது நீதிமன்ற கோப்பில் உள்ளதா என்றால் இல்லை. RDO ன் முதல் நிலை அறிக்கை அதசாஆ.6 ல் வரதட்சணை கொடுமை காரணம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த RDO விசாரணையின் போது VAO முதல் தகவல் கொடுத்துள்ளார் என்பதை தெரிந்து கொண்ட பின்னர் அந்த VAO ஐ விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் சொன்ன VAO, ஐ அழைத்து விசாரித்து இருந்தால், இந்த சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்டிருந்தவர்கள் யார் யார் என்ற விபரம் முழுமையாக தெரிந்து இருக்கும் என்றால் சரியல்ல. அதே மாதிரி இறந்து போன சிவபிரியாவின் நகைகளை எங்கே எப்போது யார் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொள்ளவில்லை ஏனெனில் சாட்சிகள் யாரும் அதை பற்றி சொல்லவில்லை. சிவபிரியாவின் சகோதர சகோதரிகள் எத்தனை பேர் என்பதும், அவர்களுக்கு இயல்பாகவே தற்கொலை செய்யும்

எண்ணம் இருக்கிறது என்ற விபரம் புலன் விசாரணையின் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொள்ளவில்லை. இந்த RDO விசாரணையில் எதிரி விருமாண்டி அன்று தான் சவாரிக்கு வெளியே சென்றிருந்த போது, தனது உறவினர் ஜெயப்பிரகாஷ் வந்து கதவைத் தட்டும் போது, நான் வருகிறேன் என்று சொன்னவர் வராமல் கதவை மூடிய நிலையில் இருந்ததாகவும், கதவை உடைத்து பார்த்த போது, தூக்கில் தொங்கிய சிவபிரியாவை கீழே இறக்கி, விருமாண்டிக்கு தகவல் சொல்லி, சவாரிக்கு சென்ற விருமாண்டி பாதியிலேயே திரும்ப வந்ததாக குறிப்பிடப்பட்டதை நான் விசாரணை செய்தேனா என்றால், ஜெயபிரகாஷ் கதவைத் திறக்கும் போது அந்த இடத்தில் விருமாண்டி இருந்ததாகத்தான் எனது விசாரணையில் தெரிய வந்தது. புலன் விசாரணையின் படி RDO enquiry என்பது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு தான் துவக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை அசலானது RDO விசாரணை செய்வதற்காக அவருக்கு அனுப்பப்படும் என்றால் சரிதான். பாக்கியலெட்சுமி என்பவர் எழுதி தாக்கல் செய்த எழுத்து மூலமான புகார் அதசாஆ.1 ல் எந்த இடத்திலும் RDO அலுவலகத்தில் இருந்து வந்ததாக பதிவுகள் இல்லை என்றால் சரிதான். 04.02.2017 பதிவு செய்ததாக வந்த முதல் தகவல் அறிக்கை நடுவர் நீதிமன்றத்திற்கு 17.04.2017 ம் தேதிதான் பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அசல் புகாரும் முதல் தகவல் அறிக்கையும் இணைத்து தான் RDO அலுவலகத்திற்கு அனுப்படும்,

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் மட்டும் அவர் மேற்குறிப்பு செய்துள்ளார். அதசாஆ.7 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கையிலும், RDO அலுவலக முத்திரையோ, கையெழுத்தோ காணப்படவில்லை என்றால் சரிதான். VAO கொடுத்த சம்பவ முதல் தகவலானது மறைக்கப்பட்டது, பின்னிட்டு குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் மேற்படி முதல் தகவல் அறிக்கை என்பது முதல் தகவல் கொடுத்த VAO ஐ சாட்சியாக போட்டால் வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் அவரை சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். VAO க்குத்தான் இறந்த சிவபிரியாவின் உடலை தகனம் செய்தது, சிவபிரியாவின் பெற்றோர்களா, எதிரியின் பெற்றோர்களா என்பதை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சிவபிரியாவின் சகோதரர், சகோதரிகளுக்கு இயல்பாக தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் இருந்ததால், சிவபிரியாவின் தற்கொலையானது அவரது சகோதரியின் திருமணத்தை பாதிக்கும் என்பதால், சிவபிரியாவின் பெற்றோரே ஊர் மக்களின் எதிர்ப்பையும் மீறி அவர்களாக தூக்கி சென்று தான் தகனம் செய்தார்கள் என்றால் சரியல்ல. இது குறித்து ஊர்மக்கள் தகவல் சொல்லி ஆர்டிஓ அவர்கள் நேரடியாக பகல் பொழுதில் கிராமத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டார் என்றும், அதன் காரணமாக தங்கள் மீது குற்றம் ஏற்படும் என்று சிவபிரியாவின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் பின்னிட்டு காவல் துறை உதவியுடன் இந்த புகாரை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு ஆர்டிஓ உடன்

எந்தெந்த அதிகாரிகள் உடன் சென்றார்கள் என்பதை விசாரித்து, அவர்களிடம் வாக்குமூலம் பெற்றிருந்தால் இந்த வழக்கின் உண்மை சம்பவம் வெளிப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது விசாரணை முழுமையடையாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகளுக்கும், இந்த வழக்கின் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2024.12.16 14:19:34 +0530

அமர்வு நீதிபதி,

மகளிர் நீதிமன்றம்,மதுரை